


# தேசப்பிதா மகாத்மா காந்தி மீண்டும் சுடப்பட்டார்!


ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டுதலில் இயங்கக் கூடியது என்பது உலகறிந்த இரகசியமாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் 2005 ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசினால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்தின் பெயர் முதல் நடைமுறைகள் வரை மாற்ற பா.ஜ.க. அரசு முடிவு எடுத்து அதை அறிவித்துவிட்டது. டிச.12 ஆம் தேதி முதல் நாளேடுகளில் அதைப் பற்றிய செய்திகள் வரத் தொடங்கிவிட்டன.

மன்மோகன்சிங்கின் காங்கிரஸ் அரசு ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு Mahatma Gandhi National Rural Employment Guanrantee Act என்று பெயரிட்டு ஒரு சட்டம் இயற்றியது. இதைச் சுருக்கமாக MGNREGA 'மன்ரேகா' என்று பேச்சு வழக்கில் இந்தத் திட்டத்தை அழைக்கிறோம். இதனைத்தான் மாற்றப் போவதாக அறிவித்து மசோதாவாக கொண்டு வர புதுப் பெயரும் அறிவிக்கப்பட்டது . அந்தப் பெயர் 'பூஜ்ய பாபு க்ராமீன் ரோஜ்கார் யோஜனா' என்பதாகும். (Pujya Bapu gramin Rozgar Yojana)

மகாத்மா காந்தி ஊரக வேலை திட்டம் என்றால் அனைவருக்கும் பளிச்சென்று இன்னார் பெயரில் திட்டத்தின் பெயர் இருக்கிறது என்று தெரியும். முதல் அறிவிப்பில் மகாத்மா காந்திக்குப் பதிலாக 'பூஜ்ய பாபு' என்று போட்டுவிட்டார்கள். பெருந்துறவிகளை, மதிப்புமிக்கவர்களை 'பூஜ்யர்' என்று அழைப்பது (வட) நூலார் மரபு. 'பாபு' என்பது காந்தியாரை அன்பாகக் குறிப்பிடுவது ஆகும். பாபு இராஜேந்திர பிரசாத், பாபு ஜெகஜீவன் ராம் என்பது போல. ஆக, 'பூஜ்ய பாபு' என்பது மகாத்மா காந்தியை மறைமுகமாகக் குறிப்பிடுவதே ஆகும். ஆனால் மேலே நாம் குறிப்பிட்ட 'Pujya Bapu' எனும் பெயரில் ஊரகத்திட்ட மசோதா தாக்கல் செய்யப்படவில்லை.

கடந்த டிச.12 ஆம் தேதி நாடாளுமன்ற மக்களவையில் மற்றொரு பெயரில் ஊரகத்திட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தின் பெயர் viksit Bharath Guarantee for Rozgar and Ajeevika mission gramin என்பது ஆகும். இதை எப்படி நீட்டி முழக்குவது? ஆகவே சுருக்கமாக V B G -RAM G என்றாக்கி விட்டனர். பூஜ்யர் காந்தி, ராம்ஜி ஆக்கப்பட்டுவிட்டார். இந்த திடீர் மாற்றம் ஏன்? இது சட்டத்தின் பெயர் போலத் தெரியாமல் வி.பி.ஜி. ராம்ஜி என இரட்டையர் போல நபர்களைப் போல இருக்கிறது. ஒரு சட்ட மசோதா போல படிக்கத் தோன்றவில்லை.

நாக்பூர் குருபீடம், காந்தியை பூஜ்யர் ஆக்குவதில் விருப்பமில்லாது இருக்கலாம். 'கொள்கைகளில் மிக ஆழமான அழுத்தமான வேறுபாடுகள் காந்தியோடு ஆர்.எஸ்.எஸ்.க்கு உண்டு' என்று இந்து ஆங்கில நாளேடு டிச.18 ஆம் தேதி எழுதி இருக்கிறது. ஆகவே மீண்டும் பெயர் மாற்றம் நிகழ்ந்து இருக்கிறது. இரண்டு தலைப்புகளில் சிந்தித்துப் பின்னர் 'பூஜ்யரை' நீக்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. குருபீடம் வழிகாட்டுதல் படி நடந்து கொள்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

**ஊரக வளர்ச்சித் திட்டம் காந்தியின் பெயரால் கடந்த 20 ஆண்டுகளாக நடந்து வந்து இருக்கிறது. காந்தி தேசப்பிதா; மக்கள் தலைவர். மக்கள் 'பூஜித்த பூஜ்யர்'அவர். தனக்காகவோ, தமது மக்களுக்காகவோ எதையும் எதிர்பார்க்காது நாட்டிற்காக உழைத்தவர். அவர் பெயரை முதலில் ஊரகத் திட்டத்திற்கு மறைமுக மாக வைத்து முதலில் கூறினர். பிறகு 'ராம்ஜி' ஆக்கிவிட்டனர். இந்த செயல்பாட்டினை என்னவென்று சொல்வது? காந்தி மீண்டும் சுடப்பட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.**

நாம் இந்தக் கட்டுரையில் இந்தச் சட்டத்தினால் ஏற்படும் பாதகங்களை இங்கே சொல்லவரவில்லை. மாநில அரசுகளின் நிதி சுமைகளை அதிகமாக்கி விட்டதைப் பற்றி கூற வரவில்லை. காங்கிரஸ் ஒன்றிய அரசு 'மன்ரேகா' சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய போது இச்சட்டத்தைக் கடுமையாக விமர்சித்து இந்தியன் எக்ஸ்பிரசில் குருமூர்த்தி எழுதிய கட்டுரைகளை நினைவுப்படுத்த விரும்பவில்லை. மோடி 2014 இல் ஆட்சிக்கு வந்த புதியதில் நாடாளுமன்றத்தில் 'மன்ரேகா' திட்டத்தைப் பலப்பட பேசிக் கிண்டல் அடித்ததைக் கூட நாம் எடுத்துச் சொல்லப்போவதில்லை. நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி மன்ரேகா மாற்று மசோதா மீது பேசிய பேச்சின் அம்சங்களைக் கூட நாம் மீண்டும் உங்களுக்கு கவனப்படுத்த போவதில்லை. கனிமொழி கருணாநிதி பேச்சை முடிக்கும் தருணத்தில் 'மைக்கை' நிறுத்தியதைப் பற்றி எல்லாம் விரிவாகச் சொல்லப்போவதில்லை.

புகழ்பெற்ற உலகக் கல்வியாளர்கள், மேதைகள் என்று அறிமுகமான ஜோசப் இ.ஸ்டிக்லிட்சு, பவிலினா ஆர்.டெக்கர் நிவா, தாமஸ் பிக்ட்டி, இஸ்பெல் பெர்ராஸ், ரண்டல் ரே, ஜேம்ஸ் கால் பெர்ய்த் ஆகியோர் மன்ரேகாவை ஒழித்து புதிய மசோதாவைக் கொண்டு வந்ததை எதிர்த்து இருக்கிறார்கள். இது குறித்து மேற்சொன்னவர்கள் கையெழுத்திட்டு ஒன்றிய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடித உள்ளடக்கத்தையும் நாம் சொல்லவிரும்பவில்லை.

பத்திரிகைகள் எல்லாம் எழுதிய தலையங்கங்கள், அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் வி.பி.ஜி. ராம்ஜி பற்றி என்ன சொல்லி இருக்கின்றன என்பதை உங்களுக்குச் சொல்லப் போவதில்லை. அரசியல் சட்டம் 41 ஆவது பிரிவு வழங்கியுள்ள உரிமைகளை மோடி அரசு பறித்துக் கொள்கிறது என்பதையும் நாம் சொல்லப் போவதில்லை.

ஒன்றிய பா.ஜ.க. அரசு - மோடி அரசு ஒரு மைனாரிட்டி அரசு. சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் ஆகியோர் கட்சிகளின் தயவில் உள்ள கட்சி - ஒரு மைனாரிட்டி அரசு பெருந்திட்டத்தை அழித்து பெயர் மாற்றம் செய்து இருக்கிறது. அந்த மைனாரிட்டி அரசைப் பற்றி நாம் எதையும் சொல்லப்போவதில்லை.

மதச்சார்பின்மை அரசு, புதின் இந்தியாவுக்கு வந்து பிறகு தம் தாய்நாடு திரும்புகிற போது அவரிடம் கீதையைக் கொடுத்தாரே மோடி அதைப் பற்றி நாம் எதுவும் சொல்லப்போவதில்லை. புதினுக்கு விருந்தளித்த போது இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் பேசுகிறமொழி இந்தி இல்லை என்று சொன்னாரே அதனை இப்போது விளக்கப் போவதில்லை.

நிறைவேற்றப்பட்டுள்ள புதிய ஊரக மசோதாவைப் பற்றி சந்திரபாபு நாயுடு கட்சியைச் சேர்ந்தவர்கூட ஒரு முனகலை வெளியிட்டு இருக்கிறார்.அதைப் பற்றியோ நாயுடுவின் மௌனம் பற்றியோ நாம் எழுதப்போவதில்லை.

நாயுடு இந்த நேரத்தில் நிர்மலாசீதாராமனைச் சந்தித்து ஆந்திராவுக்கு நிதி தேவைக் குறித்த கோரிக்கை வைத்து இருக்கிறார். அதைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லப்போவதில்லை.


**ஆனால் மகாத்மா காந்தி திட்டத்தின் பெயரை மறைத்து 'பூஜ்ய பாபு' என்று மோடி முதலில் கூறி 'பாவ்லா' காட்டி பிறகு 'வி பி ஜி ராம் ஜி' பெயரை முன்மொழிந்து மசோதாவை டிச.18ஆம் தேதி நிறைவேற்றி விட்டார்களே, இது நியாயமா? இது அரசியல் அறமா என்று கேட்க விரும்புகின்றோம்.**

இவர்கள் உண்மையில் காந்தியின் மீது அபிமானம் இல்லாதவர்கள் என்பது உலகத்திற்கே தெரியும். அதை இப்போது இரண்டாவது முறையாக செயலில் காட்டிவிட்டார்கள். ஆம்; மீண்டும் காந்தி சுடப்பட்டார். என்ன செய்யப்போகிறோம்? இது மாதிரி இன்னும் பல நிகழ்வுகள் இனி நிகழலாம். அதைப்பற்றி நாம் ஆழமாக கவனமாகப் பார்க்க வேண்டும். சிந்திக்க வேண்டும்.

கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார், 'பா.ஜ.க.வுக்கு தைரியம் இருந்தால் ரூபாய் நோட்டில் உள்ள காந்தி படத்தை மாற்றிக் காட்டட்டும்' என்று பேசியிருக்கிறார். இது இந்து தமிழ்திசை (19.12.2025) நாளேட்டில் வெளி வந்து இருக்கிறது.

டி.கே.சிவகுமார் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - சங்பரிவார் கும்பலைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர் என்று சொல்லமுடியாது. முன்பு ஒரு முறை அவர்களது பாடலைப் பாடிவிட்டு பிறகு திரும்பப் பெற்றுக் கொண்டவர் இவர். ரூபாய் நோட்டில் இருக்கிற காந்தியை எடுத்துவிட்டு கோட்சேவைக் கூட அச்சிட்டு புழங்க விடுவார்கள். மோடி அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்வார்கள். நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதே முக்கியம்.

மைனாரிட்டி பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு முட்டுக் கொடுப்பதற்குச் சந்திரபாபு நாயுடுவும் 'ஹிஜாப்' புகழ் நிதிஷ்குமாரும் இருக்கிறார்கள். மோடி என்றால் சாமான்யமா? அதுவும் இது வரை 29 சர்வதேச உயர் விருதுகளைப் பெற்றவரான மோடி எதையும் செய்வார்; ஏனெனில் அவரிடம் ஆட்சி அதிகாரம் இருக்கிறது.



**க. திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

அதுமட்டுமல்ல அவர்கள் ஜனநாயகவாதிகள் இல்லை. மதச்சார்பின்மை கொள்கைக்கு எதிரானவர்கள். முஸ்லிம், கிறிஸ்தவர்களை பகிரங்கமாக எதிர்ப்பவர்கள். சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள். பண்டித நேருவைத் தொடர்ந்து விரோதியைப் போலப் பார்ப்பவர்கள். இந்திரா காந்தியைப் பிடிக்காதவர்கள். மோடி அண்டு கம்பெனியார் மக்கள் விரோத காரியங்களைத் துணிந்து செய்து விடுவார்கள்.

அரசியல் சட்டத்தின் 370ஆவது பிரிவை இரத்து செய்தார்கள். காஷ்மீர் மாநிலத்தின் அந்தஸ்தை நீக்கிவிட்டார்கள். யூனியன் பிரதேசமாக்கி சிறுமைப்படுத்தினார்கள். ஏதோ போனால் போகிறது என்று அங்கே தேர்தலை நடத்திவிட்டார்கள். காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை எப்போது வழங்கப் போகிறார்கள்? இவர்கள் இருக்கிறவரை அது நடைபெற போவதில்லை.

ஒன்றிய காங்கிரஸ் அரசு இருக்கிறபோதே பாபர் மசூதியைத் தகர்த்தெறிந்தார்கள். இராமர் பிறந்த இடத்தில் பாபர் மசூதி கட்டப்படவில்லை. இதற்குப் பல அறிஞர்கள், வரலாற்றாசிரியர்கள் சான்றுகள் காட்டியும் அவை எதுவும் அவர்கள் முன் பயன்படவில்லை. அவை எல்லாம் ஆவணமாக மாறிவிட்டன.

இராமர் கோவில் எழுப்பிவிட்டார்கள். பாலஇராமரை 'பிரதிஷ்டை' செய்துவிட்டார்கள். பிரதமரே பூசை, புனஸ்காரம் மேற்கொண்டார். மோகன் பகாவத், சந்நியாசி ஆதித்யநாத், உ.பி. ஆளுநர் ஆனந்தி பென் உட்பட அருகே இருந்தனர். இப்படி மதச்சார்பின்மை உடைத்தெறியப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாகக் காவிக் கொடியை இராமர் கோவிலில் பிரதமர் அண்மையில் உயர்த்தினார். அமித்ஷா பீகாரில் சீதைக்கு ஒரு கோவில் எழுப்ப இருக்கிறார். இதுவெல்லாம் செய்கிற அரசுக்கு காந்தியின் பெயரால் உள்ள திட்டத்தை தூக்கி எறிவது மிக எளிதானதே.

ஆட்சி அதிகாரம் மோடியிடம் இருப்பதால் 44 தொழில் உறவு சட்டங்களை 4 சட்டங்களாக ஆக்கிவிட்டனர். ஆங்கில ஆட்சிக் காலம் முதல் தொடங்கி சுதந்திர இந்தியா ஆட்சிக் காலம் வரை போராடிப் பெற்ற உரிமைகளைச் சட்டமாக்கினோம். அவையெல்லாம் தூக்கி எறியப்பட்டுவிட்டன. இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டன. தொழிற்சங்கங்கள் போராடிக் கொண்டு இருக்கின்றன.

மோடி அரசின் மனத்தில் அனைவருக்குமான சிவில் சட்டம் நிழலாடிக் கொண்டு இருக்கிறது. இதனையும் ஒரு நாள் செய்துவிடுவார்கள்.

கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் சொல்லும் வேலையை அவர்கள் செய்யக் கூடியவர்கள். ரூபாய் நோட்டை செல்லாது என்று அறிவிக்க உடனடியாக அவர்களால் முடிந்தது போல ரூபாய் நோட்டிலிருந்து காந்தியையும் நீக்கிவிடக் கூடியவர்கள்.

நாட்டிலுள்ள காந்தி சிலைகளையும் ஒரே இரவில் அகற்றிவிடக் கூடியவர்கள் மோடி வகையறாக்கள்.

காந்தியின் நினைவிடம், நேரு, அபுல்கலாம் ஆசாத், இந்திரா காந்தி நினைவிடங்களையும் இல்லாமல் செய்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியாவின் தேசப்பிதா சாவர்க்கர் என்று பிரகடனப்படுத்தி நாடு முழுவதும் பரப்புரை மேற்கொண்டாலும் வியப்படைய முடியாது. ஏன் இப்படிச் சொல்கிறோம் என்றால் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., சங்பரிவார் மனோபாவம் அப்படிப்பட்டது.

சுதந்திரத்திற்காகப் பாடுபடாதவர்கள் தேசப்பிதா பெயரைச் சட்டத்திலிருந்து நீக்குகிறார்கள். மக்கள் விரோத போக்கையே கடைப்பிடிக்கிறார்கள். அதைச் சட்டங்களின் மூலம் நிறைவேற்றிக் காட்டுகிறார்கள். ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால் எதை வேண்டுமானாலும் செய்துவிடுவது ஜனநாயகம் இல்லை என்பது அவர்களுக்குப் புரியாமல் இல்லை. 'இவர்களால்' என்ன செய்துவிட முடியும் என்றே அவர்கள் கொக்கரிக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். பஞ்சாப் விவசாயிகள் சுமார் இரண்டு ஆண்டுகள் போராடினார்கள். சாலைப் போராட்டம் நடந்தது. உறக்கம், உணவு சாலையிலேயே நிகழ்ந்தது. விவசாயிகள் குடும்பம் குடும்பமாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

களத்தில் ஆண், பெண், சிறுவர்கள், சிறுமிகள் எனப் போராடினார்கள். 1000 பேர் மரணம் அடைந்தார்கள். ஒன்றிய அரசு பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியது. விவசாயத் தொழிலாளர் சட்டம் மூன்றையும் இரத்து செய்கிற வரை போராட்டம் நடந்தே தீரும் என்று விவசாயிகளின் தலைவர்கள் அறிவித்தார்கள். கடைசியில் ஒன்றிய அரசு பணிந்தது. ஆனால் அதற்குப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருந்தது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தாக வேண்டும்.

**நாடாளுமன்ற ஜனநாயகத்தில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற அரசு எதை வேண்டுமானாலும் செய்யலாம். அங்கே ஜனநாய கம் என்பது சர்வாதிகாரி முன் நீர்த்துப் போகும். முசோலினியின் சொற்களான 'நான் முதன்மை சேவகன்' என்பதை தான் மோடியும் சொல்கிறார். ஆகவே மெஜாரிட்டியில் உள்ள ஓர் அரசு ஜனநாயகத்தின் மூலம் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயன்றால் மக்கள் போராட்டம் ஒன்றே அதற்குத் தீர்வு. போராட்டம் எல்லாவித இழப்புகளையும் கொண்டது என்பதை கருத்தில் கொண்டு இறங்க வேண்டும்..**

நமது எதிரியான ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. சங்பரிவாரின் பின்னே ஒளிந்து கொண்டு செயல்படுகிறது. எதிரியின் நாடியைப் பார்த்துப் போராட்டத்தைக் கட்டமைக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ். எப்படித் தோன்றியது? இந்து அரசர்களாலும் நிலப்பிரபுக்களாலும் உருவாக்கப்பட்ட இந்து மகாசபை அமைப்பிலிருந்து உருவானதுதான் ஆர்.எஸ்.எஸ்.

ஆய்வாளர் ஒருவர், "தொழில் மயம், நகரமயம், கல்வி பரவலாக்கல், இடப் பெயர்வு ஆகிய காலனி ஆட்சியின் திட்டமிடப்படாத ஆதாயங்கள், இந்துக்களுக்குள் பிற்பட்டோரைக் கண்டறியும் லெஸ்லி மில்லர் அறிக்கை, வகுப்புவாரி பிரதிநிதித்துவம், கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கம், பகத்சிங்கின் புரட்சிகர செயல்பாடுகள், அம்பேத்கரின் அரசியல் வருகை, தெற்கே திராவிட இயக்கத்தின் எழுச்சி, ஆரியர்களுக்கு முந்தைய சிந்துவெளி நாகரிகப் பகுதிகள் கண்டுபிடிப்பு என அடர்ந்தேறிய நிகழ்வுகள் பார்ப்பனியவாதிகளுக்கு உவப்பாய் இல்லை. அவர்கள் சரியும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் பதற்றத்தில் அதே காலகட்டத்தில் அநேக அமைப்புகளை உருவாக்கினர். அவற்றிலொன்று ஆர்.எஸ்.எஸ்." என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

அப்படியானால் மோடியின் பா.ஜ.க. அரசின் குணம், மணம், நெடி எப்படி இருக்கும் என்பதை நாம் அறிந்தே வைத்து இருக்கிறோம். பா.ஜ.க. அரசு நாடாளுமன்ற பெரும்பான்மையை வைத்துக் கொண்டு திராவிட இயக்கத்தை, இடதுசாரிகளை, மதரீதியாக முஸ்லிம்களை, கிறிஸ்தவர்களை அடக்கி ஒடுக்கி இல்லாமல் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும்; இருக்கிறது.

**காங்கிரசின் விடுதலைப் போராட்டத் தலைவர்களைக் காப்பாற்ற வேண்டியது இந்திய மக்களின் பெருங்கடமையாகக் கருத வேண்டும். ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொட்டம் அடங்க வேண்டும் என்றால் இந்தியாவே ஸ்தம்பிக்கிற போராட்டம்தான் தீர்வுக்கு ஒரே வழி என்று கட்டுரையாளரான நாம் கருதுகின்றோம். ஜனநாயக மன்றமான நாடாளுமன்றம் ஆளுங்கட்சிக்கு எதிரான கருத்துகளை வைப்பதற்கு பயன்படும். நமது வலிமையைப் புலப்படுத்தும் விதத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசை மக்கள் மன்றத்தில் எல்லா இழப்புகளுக்கும் தயார் நிலையில் எதிர்த்துப் போராட வேண்டும். ஆதிக்க சக்திகளைப் பெரும் போராட்டங்களே வீழ்த்தி இருக்கின்றன. இதுதான் வரலாறு.**

---

மகாத்மாகாந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் பெயர் மாற்றம் - ஒன்றிய அரசைக் கண்டித்து

## ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மயிலாடுதுறை மாவட்டக் கூட்டத்தில் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*மயிலாடுதுறை, டிச. 24-*

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி கூட்டத்தில் நோக்கம் குறித்து கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் குறித்து பேசினார். கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் உயர்நிலை செயல் திட்டத்தில் உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மயிலாடுதுறை என்.இளையராஜா, பூம்புகார் மன்னை த.சோழராஜன், சீர்காழி மு.தினேஷ் குமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி. எம்.ஸ்ரீதர், விவசாய அணி இணைச் செயலாளர் ஜெக.வீரபாண்டியன், இலக்கிய அணி மாநில துணை துணை செயலாளர் வை.சௌமியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து. மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்ட துணை செயலாளர்கள் மு. ஞானவேலன், கண்ணகிபன்னீர், மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர்,

ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம்.மூர்த்தி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், மங்கை எம்.சங்கர், செல்லசேது.ரவிக்குமார், ஏ.ஜி.ஜே. பிரபாகர், மலர்விழிதிருமாவளவன், .ஏ.ஆர். ராஜா பஞ்சு.குமார், கு. வைத்தியநாதன், அமிர்த. விஜயகுமார், ப. முருகமணி, , நகர செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ். ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி. சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், ஹர்ஷத், அ.காந்தி, சுபாநெடுஞ்செழியன், எம்.பி.கென்னடி, பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, எம். அன்புச்செழியன், அரசு வழக்கறிஞர் இராம. சேயோன்,

சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம். கே.மருது, இரா.செல்வராஜ், ஆர்.எஸ் ஸ்ரீதர், காளி தேசப்பன், இரா.முருகன், பெரு.வீரமணி டி.ராஜ்குமார், வெடி எஸ். பாலமுருகன், வி.எஸ்.பிரபாகர், தீபா சத்தியேந்திரன், ஜி.வைத்தியநாதன், இரா.தன்ராஜ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சௌ.சர்வேதையன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், க. சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



---

100 நாள் வேலை வாய்ப்பு திட்ட பெயர் மாற்றத்திற்கு கண்டனம் தெரிவித்து

## நாகையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்!

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் ! மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

*நாகை,. டிச. 24-*

நாகை மாவட்ட தி.மு.க.. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழகப் பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க.இராஜேந்திரன் மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும், இன்று ஒன்றிய அலுவலகங்கள் முன் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை விளக்கியும்,



மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என். ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா. மலர்வண்ணன், என்.சதாசிவம், நகர கழக செயலாளர்கள் இராமாரிமுத்து, மா.மீ. புகழேந்தி, எம்.ஆர்.செந்தில் குமார், பேரூர் செயலாளர்கள் கா.அட்சலிங்கம், மரிய சார்லஸ், முகமதுசுல்தான், சி.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முக்கிய தீர்மானமாக ஒன்றிய அரசு 100 நாள் வேலையான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கு நிதியை குறைத்து வரும் நிலையில் அந்த திட்டத்தின் பெயரை மாற்றி 100 நாள் திட்டத்தின் கீழ் பயன் பெறும் பயனாளிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டனத்தை தெரிவித்து தலைமை கழகம் அறிவித்தது போல் நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, திருமருகல், கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு, வேதாரண்யம் ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து, கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டப் பயனாளிகள் என பெருந்திரளானோர் கலந்து கொள்ள செய்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.